# C.S.I TAMIL CHURCH - OMAN


# “பாலைவன மன்னா”




**மன்னா – 9 செப்டம்பர் 2019 பிரதி – 6**



# ஆயர் மடல்



கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்!

ஆண்டவருடைய படைப்புக்காக நன்றி செலுத்தும் அறுவடை திருநாளை இம்மாதம் சந்திக்கவும், ஆண்டவரை தொழுதுகொள்ளவும் ஆயத்தப்படுகின்றோம். நன்றித் தொழுகையில் மட்டுமல்லாது ஆண்டவருடைய வழிநடத்துதலுக்காக ஒவ்வொரு நாள் இரவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவது நமது வாழ்வுக்கு நன்மை பயக்கும்.

**கற்றுக்கொள்வோம்:-**

கடந்தமாதம் விடுமுறை காலங்களில் பெரிதும் சிறிதுமான நமது பயணங்களில் ஆண்டவர் நம்மை பாதுகாத்தார். நன்றி செலுத்துவதோடு, ஆண்டவர் நமக்கு தரும் உணவு, உடை, உறைவிடம், பணிகள், உயர்வு, குடும்ப வாழ்வின் நன்மை, உடல்சுகம், அன்றாடம் நாம் உழைக்கப் பெற்றிருக்கும் ஆற்றல் அனைத்துக்காகவும் நன்றி செலுத்துவது நமது கடமை என்பதை நாம் உணர்வதோடு நம் பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுப்போம்.

**கருத்தாய் செயல்படுவோம்:-**

நம் தனிப்பட்ட வாழ்வு, குடும்ப வாழ்வு, திருச்சபை வாழ்வு, சமுதாய வாழ்வு அனைத்திலும் கர்த்தர் நமக்கு அநேகப் பொறுப்புகளைத் தந்திருக்கிறார். உடல் தூய்மை, உள்ளத் தூய்மை இவை நம் தனிப்பட்ட வாழ்விலும், உழைப்பு, உண்மை இவை நம் சமுதாய வாழ்விலும், அன்பு, அமைதி இவை நம் குடும்ப வாழ்விலும், பணிவு, பக்தி இவை நம் திருச்சபை வாழ்விலும் அதிகமாய் பெருக்க வேண்டியது நமது பொறுப்பு ஆகும். இதுவே நம்மைப் பார்த்து நமது பிள்ளைகளும் கற்றுக்கொள்கிறார்கள். எனவே பொறுப்பான வாழ்வுக்கு கருத்தாய் செயல்பட அன்போடு அழைக்கிறேன்.

இம்மாதத்தின் இறையாசி உங்களை நிரப்புவதாக!

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

# ஆயர் அருளுரை

## பொறுப்பான வாழ்வு

**"உம்முடைய கரத்தின் கிரியைகளின்மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்கு கீழ்ப்படுத்தினீர்" (சங்கீதம் 8:6).**

சகல அதிகாரங்களும் ஆளுகைகளும் கர்த்தருடையது. கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டது. இயற்கையையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் கர்த்தருக்கே உண்டு. திருமறையின் முழுப்பகுதியும் இறையாற்றலை வெளிப்படுத்துவதாகவும் மனுக்குலத்திற்கு பொறுப்பு பகிர்ந்தளிக்கப்பட்டதை மனிதன் சரியாக பயன்படுத்தாது ஏற்பட்ட வீழ்ச்சியும், இறை இயேசுவினால் உருவான மீட்சியுமே சுட்டிக்காட்டப்படுகிறது. சங்கீதக்காரன் தாவீது சங்கீதம் 8:5,6-ல் மனிதனை தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர். மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடிசூட்டினீர் என்று கூறி தொடர்ந்து ஆளுகை, அதிகாரம், பொறுப்பு பகிர்ந்து கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறார்.



திருமறையில் யோனா தீர்க்கதரிசியை ஆண்டவராகிய கர்த்தர் தெரிந்துகொண்டார். அவனுக்கு பொறுப்பு கொடுத்ததை யோனா தீர்க்கதரிசன நூலில் காணமுடிகிறது.

### 1. பொறுப்பான வாழ்வுக்கு அழைப்பு (யோனா 1:1,2)

நினிவே மக்களுடைய தவறான வாழ்வும், தவறான செயல்பாடுகளும், அக்கிரமங்களும் ஆண்டவருடைய சமூகத்தில் எட்டியது. எனவே அவர்களை மனந்திரும்பச் செய்ய விரும்பிய கர்த்தர் யோனா என்னும் மனிதனோடு பேசினார். யோனா என்னும் பெயரில் அந்நாட்களில் அநேகர் இருந்திருக்கலாம். ஆனால் அமித்தாயின் குமாரனாகிய யோனாவை ஆண்டவர் தெரிந்துகொண்டு அழைக்கிறார்.

தன்னுடைய பொறுப்பை மனிதர்களுக்கு பகிர்ந்தளித்து மனுமக்களுடைய மனந்திரும்புதலுக்கு அழைக்கும் ஆண்டவரை கண்டுகொள்ள முடிகிறது. இன்றும் உலக வாழ்வில் நாம் பெற்றிருக்கும் பொறுப்புக்கள் ஆண்டவரால் தரப்பட்டவை என்னும் உணர்வு நமக்கு வேண்டும். பெரிய பொறுப்பாயினும், சிறிய பொறுப்பாயினும் கர்த்தருடைய கரத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிறோம்.

ஆதியாகமம் 2:15-ல் "தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்". கர்த்தருடைய பொறுப்பு படைத்தலும், வழிநடத்துதலும், காத்தலும் ஆகிய பொறுப்பு மனிதனுக்கு வழங்கப்படுகிறது. படைப்புக்காகவும், பொறுப்புக்காகவும் நன்றி செலுத்தி வாழ்வதே சிறந்த வாழ்வு.

## 2. பொறுப்பான வாழ்வுக்கு வழிநடத்தல் (யோனா 1:10-17)

கர்த்தருடைய கட்டளையையும், பொறுப்பையும் செய்யாது தப்பித்து ஓட எண்ணினான் யோனா. எனவே நினிவே நகரம் செல்லவேண்டிய யோனா தர்ஷீசுக்கு செல்ல கப்பல் ஏறினான். சமுத்திரத்தில் பெருங்காற்றை ஏற்படுத்திய கர்த்தருடைய செயல்பாடு யோனாவைக் காட்டிக்கொடுத்தது. யோனா 1:10-ல் "அவன் கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகிறவன் என்று அறிவித்ததினால் அந்த மனுஷர்கள் மிகவும் பயந்து..." என்று கண்டுகொள்ள முடிகிறது.

ஆண்டவர் கொடுத்துள்ள பொறுப்புகளில் தவறும் மனிதன் தனக்கு மட்டுமல்ல தான் வாழும் திருச்சபை, சமுதாயம், குடும்பம், அனைத்துக்கும் இடறலை உண்டாக்குகிறான். எனவே அவனை ஆண்டவர் திருத்த எண்ணி அவ்விடத்திலிருந்து அவனை ஆக்கினைக்கு நேராக்கி சமுத்திரத்தில் போடச் செய்கிறார். இந்நிலை கப்பலுக்கும், கடலுக்கும் சமாதானம் அருளச்செய்கிறது. அவனே சமாதானமற்றவனாய் மாறுகிறான்.

யோனாவை அழிக்க ஆண்டவர் எண்ணாதபடி ஆற்றல்படுத்த விரும்பிய கர்த்தர் கடலில் விழுந்த யோனாவை விழுங்க மீன் ஒன்றை ஆயத்தப்படுத்தினார். மீன்வயிற்றில் இரவும் பகலும் மூன்றுநாள் இருந்து கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். விண்ணப்பத்தைக் கேட்ட கர்த்தர் யோனாவை கரையிலே கக்கிப்போட கட்டளையிட்டார். மீண்டும் பொறுப்பு அந்த மனிதனுக்கு கொடுக்கப்பட்டது. பொறுப்பை மிகவும் எச்சரிப்போடு செயல்படுத்த ஆரம்பித்தான். மூன்றுநாள் பிரயாண தூரம்கொண்ட மகாபெரிய நகரமாகிய நினிவேவுக்கு விரோதமாய் பிரசங்கித்தான்.

கரத்தர் நமக்கு தந்துள்ள பொறுப்புக்களில் தவறும்போது தண்டனையும், பாடத்தையும் பெற்றுக்கொள்கிறோம். மீண்டும் பொறுப்பான வாழ்வுக்கு கர்த்தரால் வழிநடத்தப்படுகிறோம் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

## 3. பொறுப்பான வாழ்வை நிறைவேற்றுதல் (யோனா 4:1,2)

நம்முடைய பொறுப்பான வாழ்வில் நமது திட்டம் நிறைவேறுதலை நாம் விரும்புகிறோம். இறைதிட்டமும், சித்தமும் நிறைவேறுதலை நாம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம். ஆண்டவர் பொறுப்பு தரும்போது அப்பொறுப்பை நிறைவேற்ற வேண்டியது மட்டுமே நமது கடமை. அதே வேளையில் அதன் பலனை, முடிவை, வெற்றியை நாம் நமது திட்டத்திற்கு எதிர்பார்ப்பது நமக்கு எதிர்விளைவையே தரும்.

பவுல் நட்டாலும், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினாலும் விளையச் செய்கிறவர் கர்த்தர். விளையச் செய்யவேண்டும் அல்லது வேண்டாம் என்று சொல்வதற்கு பவுலுக்கும் உரிமையில்லை, அப்பொல்லோவுக்கும்

உரிமையில்லை. ஏனெனில் அவனவன் தன்தன் பொறுப்புகளை மட்டும் நிறைவேற்றுவதையே கர்த்தர் விரும்புகின்றார்.

போதகர் போதக ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும். பொறுப்பாளர்கள் தங்கள் கடமைகளைச் செய்யவேண்டும். விசுவாசி தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் எனறால் சபை வளரும்.

தந்தை தன் கடமைகளை ஆற்றவேண்டும். தாய் தன் பணிகளை ஜெபத்துடன் நிறைவேற்ற வேண்டும். பிள்ளைகள் தங்கள் பொறுப்புகளை செயல்படுத்த வேண்டும் என்றால் குடும்பம் வளரும்.

தனது பொறுப்புகளை நிறைவேற்றி முடித்த யோனா கர்த்தரிடம் கோபங்கொள்ளுகிறான். ஏன் இம்மக்களை அழிக்கவில்லை என சாடுகிறார். அதற்கு கர்த்தர் "வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம் பேருக்கு அதிக மனுஷரும், அநேக மிருக ஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ" என்று பரிதபிக்கிறார்.

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே! நம் மீது ஆண்டவர்கொண்ட பரிதபிப்பு இயேசு கிறிஸ்துவை பாலனாய் இம்மண்ணில் மலரச்செய்தது. பிதாவானவர் கொடுத்த பொறுப்பு அனைத்தையும் செய்து நிறைவேற்றி "பிதாவே உமது கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறேன்" என்று ஒப்புக்கொடுத்தார். மீட்பு இம்மண்ணில் மலர்ந்தது.

நாமும் நமது குடும்பமும், திருச்சபையும், வாழ்வு பெற்றுக்கொள்ளவும், மீட்பு பெற்றுக்கொள்ளவும், கர்த்தர் நமக்கு தந்திருக்கும் பொறுப்புக்களை உண்மையோடும், இறை அர்ப்பணிப்போடும் நிறைவேற்றுவோம்.

இறை ஆசியோடு இனிதாய் வாழ அன்போடு வாழ்த்துகிறேன்.

**அன்புடன் போதகர்,**

**Rev. Dr. N. ஜெசின்**

## வாழ்த்துகிறோம்

**"இது கர்த்தரால் ஆயிற்று, நாங்கள் மகிழ்ந்திருக்கிறோம்"**



கர்த்தருடைய கிருபையால் செப்டம்பர் மாதம் 2-ம் தேதி பரிசுத்த மெய் விவாகத்தின் மூலம் குடும்பமாக இணைக்கப்பட்டுள்ள

**Mr. G. Austin Daniel Raj & Mrs. Y. Ancy**

தம்பதியினரை திருச்சபையாக வாழ்த்துகிறோம்.

# நட்பு

**“செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்” – பிரசங்கி 10:1**



சோப்ரோணியஸ் என்ற கிரேக்க அறிஞர் ஒரு சிறந்த தத்துவ ஆசிரியர். சிறுபிள்ளைகளுக்கு ஞானமாய் பயிற்சி கொடுப்பதில் சிறந்தவர். தன் மகனோ, மகளோ ஒழுக்கமற்றவர்களோடு பழகுவதை அவர் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார். ஒரு முறை அவரது பிள்ளைகள் விருந்து ஒன்றில் கலந்துகொள்ள அனுமதி கேட்டனர். இவரோ அங்கு சில நற்செயல்களற்றவை நடக்கும், நன்னடத்தையற்ற சிலரும் வருவர் என அறிந்திருந்ததால் பிள்ளைகளுக்கு அனுமதி மறுத்துவிட்டார். அறிஞரது மகன் “நீங்கள் நினைப்பதுபோல ஆபத்தில் சிக்குவதற்கு நாங்கள் ஒன்றும் சிறுகுழந்தைகள் இல்லை” என்று ஆவேசத்தோடு கூறினான். அவரோ ஒரு வார்த்தையும் பேசாமல், வீட்டிலிருந்த ஒரு எரிந்த கரித்துண்டை எடுத்தார். அதை தன் மகனிடம் கொடுத்தார். மகன் கரித்துண்டை கையில் எடுத்த மாத்திரத்தில் கையெல்லாம் கறைபட்டது. கைதவறிய கரித்துண்டு அவனது வெள்ளைச்சட்டையிலும் விழுந்து கறை ஏற்படுத்தியது. ‘கரித்துண்டை கவனத்துடன் கையாள்வது மிகவும் சிரமம்தான்’ என்று தகப்பனிடம் கூறினான் மகன். ‘ஆம், கரித்துண்டு உன்னை சுட்டுவிடவில்லை, ஆனால் உன்னை கறைப்படுத்திவிட்டது என்பதை அறிந்துகொள்’ என்று கூறினார் தகப்பன். ஆம் இது எத்தனை உண்மை! தீயவர்களோடு பழகுவதால் உடன்தானே நாமும் தீயவர்களாகி விடுகிறதில்லை. ஆனால் அவை நம்மை கறைபட்டவர்களாக மாற்றி, காலப்போக்கில் நம்மையும் அத்தீயக் குணத்திற்கு சொந்தக்காரர்களாக மாற்றிவிடும். ஆகவேதான் வேதம் கூறுகிறது “கோபக்காரனுக்கு தோழனாகாதே, உக்கிரமுள்ள மனுஷனோடே நடவாதே, அப்படி செய்தால் நீ அவனுடைய வழிகளைக் கற்றுக்கொண்டு உன் ஆத்துமாவுக்கு கண்ணியை வருவிப்பாய்” (நீதிமொழிகள் 22:24,25) என்று நம்மை எச்சரிக்கிறது.

அதேப்போல பணஆசை உள்ளவர்களோடு பழகி பாருங்கள். அவர்கள் அதை சேர்க்கவேண்டும், இதைக் கட்டவேண்டும் என்றே பேசுவார்கள். அதைக் கேட்டுக்கொண்டேயிருந்தால், நாமும் ஐயோ நான் ஒன்றும் சேர்த்து வைக்கவில்லையே, இனி என்னவெல்லாம் செய்யலாம் என்ற எண்ணம் நம்மையும் அறியாமல் நமக்குள் வந்துவிடும். கர்த்தர் பேரில் வைத்த

நம்பிக்கையும் அற்றுப்போய் வீண்கவலைக்கும், விரக்திக்கும் ஆளாகிவிடுவோம்.

பிரியமானவர்களே! நம் நண்பனை வைத்து நம்மை சமுதாயம் இனம் கண்டுகொள்ளும். கறைபட்டுவிடாதபடி நம்மை காத்துக்கொள்வோம்.

**அன்புடன் போதகர்,**
**Rev. Dr. N. ஜெசின்**

## பெண்கள் பகுதி

### பொறுப்பான தாய்

**அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள் (நீதிமொழிகள் 31:28).**



ஒரு கிராமத்தில் தன் ஒன்றரை வயது மகனை அழைத்துக் கொண்டு ஒரு தாய் ஆற்றிற்கு குளிக்க சென்றாள். ஆற்றங்கரையில் மகனை உட்கார வைத்துவிட்டு துணிகளைத் துவைக்கத் தொடங்கினாள். சற்று நேரத்தில் ஆற்று நீரில் ஏதோ பளபளப்பாக மிதந்து வருவதைக் கண்டு வேகமாக நீந்தி சென்று அதை போய் அடைந்தாள். ஆனால் அது ஏதோ ஒரு மினுமினுப்பான கலர் பேப்பர் என அறிந்து அதை விட்டுவிட்டு கரைக்கு வந்தாள். வந்தால் கரையில் உட்கார வைத்திருந்த பிள்ளையைக் காணவில்லை. பதறிபோய் எல்லா இடத்திலும் தேடினாள். அந்தோ பரிதாபம் பிள்ளை ஆற்றுநீரில் அடித்து செல்லப்பட்டிருந்தான். பிள்ளையைவிட ஏதோ தேவையில்லாத காரியத்தின்மேல் முக்கியம் என்று நினைத்துபோய் பிள்ளையை இழந்தாளே!

இன்று அநேக தாய்மார்களுக்கு பிள்ளையை விட ஆபீஸ் வேலை, தொலைக்காட்சி சீரியல்கள், செல்போனில் தேவையற்ற பேச்சு போன்றவைதான் முக்கியமாக தோன்றுகிறது. பிள்ளைகள் பள்ளிக்கு சென்ற உடன், வேக வேகமாக சமையலை முடித்துவிட்டு, டிவி பெட்டிக்குமுன் உட்கார்ந்து வரிசையாக சீரியல் பார்க்கும் தாய்மார்கள் அநேகர் உண்டு. தாங்கள் சீரியலை பார்க்கவேண்டும் என்பதற்காகவே பிள்ளைகளை டியூஷன் அனுப்பும் தாய்மார்கள் உண்டு. டிவிகாரர்கள் தாங்கள் பணத்தை சம்பாதிக்கவேண்டும் என்பதற்காக கண்ட கண்ட கதைகளை சீரியல் என்று போட்டு காட்டிகொண்டு இருக்கிறார்கள். அதை வேலையை விட்டு பார்க்கும் நம் தாய்மார்களை என்னவென்று சொல்வது? தாங்கள் ஊர்க்கதை பேசவேண்டும் என்பதற்காகவே அந்த நேரத்தில் பிள்ளைகளை நீ போய் டிவி பாரு என்று சொல்லும் தாய்மார்களும் உண்டு.

வேதம் ஒரு தாய்க்கு சொல்லும் அறிவுரை என்ன? தன் பிள்ளைக்கு

தயையுள்ள போதகம்பண்ணுகிறவளாக இருக்கவேண்டும் (நீதி. 31:26). பிள்ளைகள் தவறு செய்யும்போது கடிந்துகொண்டு புத்தி சொல்லி, தேவைப்படும்போது பிரம்பை கையாடுகிறவளாயும் இருக்கவேண்டும். அதே நேரத்தில் அன்போடும், பொறுமையோடும் நடந்து கொள்ளுகிறவளாயும் திகழ வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தருக்கு பயப்படும் பயத்தை சொல்லிக் கொடுக்கவேண்டும்.

பிரியமான தாய்மாரே! தேவன் நம்மை நம்பிக் கொடுத்திருக்கிற பிள்ளைகளை கருவிலிருந்தே பாதுகாப்போடு வளர்ப்பது நமது கடமை. நீங்கள் ஓரளவு படித்த தாய் என்றால் பிள்ளையை டியூஷனுக்கு விரட்டாமல் வீட்டிலேயே புரிந்துகொள்ளும் விதத்தில் பாடங்களை செயல்முறையோடு சொல்லி கொடுங்கள். படிப்பில் பிள்ளைமேல் தாய் காட்டும் அக்கறையும், கவனமும் தனிதானே. பிள்ளைகளுக்கு வேதத்தை கற்றுக்கொடுப்பது, சண்டே கிளாஸ் டீச்சரின் பொறுப்பு என்று விட்டுவிடாமல், நீங்களும் வேதாகம சம்பவங்களைக் கூறி, வசனங்களை மனனம் செய்ய வையுங்கள். குடும்ப ஜெபம் செய்யுங்கள். தவறாமல் ஆலயம் செல்லுங்கள்.

பெண் பிள்ளைகளாய் இருந்தால் அவர்கள் என்ன உடுத்துகிறார்கள், எப்படி உடுத்துகிறார்கள் என்பதில் கவனம் செலுத்துங்கள். அவள் ரொம்ப பேஷன் என்று சொல்லி, தேவையில்லாத உடலைக் காட்டக்கூடிய உடைகளை வாங்கி தராதீர்கள். அதற்காக பிள்ளை உங்களிடம் கோபப்பட்டால் கண்டிப்பாய் இருங்கள். பிள்ளைகளின் உடல் சுத்தத்தைக் குறித்து கற்றுத் தாருங்கள். தலையை எப்படி வாரவேண்டும், சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கற்றுத் தாருங்கள்.

கெட்ட வார்த்தை என்றும் வாயில் வராதபடி பிள்ளைகளை வளர்க்கவேண்டும். சில நேரங்களில் பெற்றோர் பேசுவதைக் கேட்டு பிள்ளைகளும் அதை வேகமாக கற்றுக்கொள்வார்கள். பிள்ளைகள் முன்பு அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசாதபடி உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். சனியனே, தரித்திரமே, பிசாசே என்றெல்லாம் பிள்ளைகளைத் திட்டாதீர்கள். மிருகங்களின் பெயர்களையும் சொல்லி பிள்ளைகளை அழைக்காதீர்கள். அவர்களுக்கு பெயர் உண்டு. அது பரலோகத்திலும் எழுதப்பட்டிருக்கிறபடியால், அவர்களின் பெயரைச் சொல்லி அழையுங்கள்.

சிறுவயதிலிருந்தே ஜெபிக்க கற்றுக்கொடுங்கள். குடும்ப ஜெபத்தில் பிள்ளைகளும் ஜெபிக்கட்டும். சத்தமாய் ஜெபிக்கும்போது அவர்கள் இன்னும் அழகாய் ஜெபிக்கக் கற்றுக்கொள்வார்கள்.

இவைகளை செய்து வளர்த்தால் உங்கள் பிள்ளைகள் எழும்பி உங்களை பாக்கியவதி என்பார்கள். ஆமென் அல்லேலூயா!

ஒரு தாய் தேற்றுவது போல்
என் நேசர் தேற்றுவார்

மார்போடு அணைப்பாரே
மனக்கவலை தீர்ப்பாரே

இந்த பாடலின் வரிகளோடு உங்களை அன்பாக வாழ்த்துகிறேன்.

**அன்புடன் பெண்கள் சங்க தலைவி,**
**திருமதி D. ஷர்மிளா ஜெசின்**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள் - பிளாரன்ஸ் நைட்டிங்கேல்

### பிறர் வெறுத்தாலும்...



பிறப்பு : 12-05-1820
இறப்பு : 13-08-1910
ஊர் : பிளாரன்ஸ்
நாடு : இத்தாலி
தரிசன பூமி : துருக்கி

1953-ம் வருடம் ரஷ்யா, துருக்கி நாட்டின் மேல் போர் தொடுத்தது. ரஷ்யாவின் வளர்ச்சியைத் தடுக்க எண்ணிய பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் நாடுகள் துருக்கிக்கு ஆதரவாக போரில் இறங்கின. இப்போர் கிரிமியன் போர் என்று அழைக்கப்பட்டது.

இருதரப்பிலும் ஏராளமான உயிர் சேதங்கள். பிரிட்டன் படைவீரர்கள் மிகவும் சோர்வடைந்தனர். அதோடு காலரா மற்றும் மலேரியா நோய்கள் அவர்களைத் தாக்கின. போர்க்காயங்களோடு இரட்டத்தனையான வேதனையை அனுபவித்தனர். உடல்வேதனையும், மனவேதனையும் போர்வீரர்களை உருக்குலைத்தன.

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் இத்தாலி நாட்டைச் சார்ந்தவர். இளமையிலேயே தொண்டு புரியும் எண்ணம் நிரம்பப் பெற்றவர். கிறிஸ்துவுக்குள் அனுதினமும் வளர்ந்ததால் கிறிஸ்துவின் சிந்தை நைட்டிங்கேலிடம் நிறைந்திருந்தது. ஆண்டவருடைய சித்தத்திற்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்து செவிலியப் பயிற்சியை மேற்கொண்டார். பின்னர் அத்துறையில் மேற்பார்வையாளராக பணியாற்றிக் கொண்டிருக்கும்போதுதான் எதிர்பாராத அழைப்பு வந்தது.

பிரிட்டிஷ் வீரர்களின் காயங்களை ஆற்றி அவர்களை மீண்டும் சகஜ நிலைக்கு திருப்பச்செய்ய பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அழைக்கப்பட்டார். சிட்னி ஹெபார்ட் என்ற போர்த்துறை அமைச்சரின் அழைப்பை ஏற்று 38 செவிலியர்களுடன் துருக்கிக்கு விரைந்தார். போர்வீரர்களின் தலைவர்கள்

பலர் பெண்களின் சேவையை வெறுத்தனர். ஆயினும் நைட்டிங்கேல் விடாமுயற்சியுடனும், பொறுமையுடனும் பணிவிடைகளை மேற்கொண்டார். 8000-க்கும் மேற்பட்ட வீரர்கள் நோயினின்று காப்பாற்றப்பட்டனர்.

“கைவிளக்கேந்திய காரிகை” என்று பட்டம் சூட்டப்பட்ட இவர் 1956-ம் ஆண்டு இங்கிலாந்து திரும்பிய உடன் செவிலியர்களுக்கான பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து, அநேக கைவிளக்கேந்திய காரிகைகளைத் தோற்றுவித்தார். 13-08-1910-ல் உயிர் துறந்தார்.

அன்பரே! நோய்வாய்ப்பட்ட மக்களுக்கு உங்கள் உதவி என்ன?


**வாழ்விலிருந்து வாழ்வுக்கு** : “உலகோர் உன்னைப் பகைத்தாலும், உன்னை அழைத்த தேவனுக்கு உண்மையாக ஊழியம் செய்திடவேண்டும்”.

**குயவனின் கரங்களில்** : ஆண்டவரே! உலகத்தின் போராட்டங்களை வெற்றிக்கொண்டு உமக்குச் சாட்சியாக நான் வாழ்ந்திடுவேன்.

**தியானத்திற்கு** : 1இரா. 8, எரே. 34, மாற்கு 8

(நன்றி: 365 மிஷனெரிகளின் வரலாறு)

## நிகழ்வும் - பாடமும்



இரப்பரைப் பார்த்து பென்சில் சொல்கிறது, “ஒவ்வொரு முறை நான் செய்யும் தவறுக்கும், என்னை சுத்தப்படுத்தி தூய்மையாக்கி விடுகிறாய், ஆனால் என்னை சுத்தம் செய்யும்போது நீ கரைந்துக்கொண்டே போகிறாயே, அது எனக்கு வருத்தமாக இருக்கிறது” என்று,

இரப்பர் அதற்கு “அது என் கடமை, நான் படைக்கப்பட்டதே அதற்குத்தான். என்னைக் கண்டு நீ வருந்தவேண்டாம், இதில் எனக்கு முழு மகிழ்ச்சி, என்னால் உன் தவறுகள் அழிக்கப்பட்டு, நீ திருத்தங்களுடன் முன்னேறி சென்றால் அதுவே என் வெற்றி, நான் கரைவதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை என்றது”.

“அந்த இரப்பர் வேறு யாருமில்லை, நம் பெற்றோர்கள் தான். அவர்கள் ஆயுள் முடியும்வரை நம் தவறுகளைத் திருத்திக்கொண்டே இருப்பார்கள்...”

**“நம் மீது பொறாமைப்படாத இரு உள்ளங்கள் நம் பெற்றோர்கள்”**

## பாடலின் பின்னணியம்

### அழகாய் நிற்கும் யார் இவர்கள்?

மத்தேயு 25: 31 – 40 பாடல்: **N.**எமில் ஜெபசிங்
வெளி. 7: 9 – 17 ராகம்: **N.** எமில் ஜெபசிங்

அழகாய் நிற்கும் யார் இவர்கள்?
திரளாய் நிற்கும் யார் இவர்கள்?
சேனைத் தலைவராம் இயேசுவின் பொற்தளத்தில்
அழகாய் நிற்கும் யார் இவர்கள்?



1. ஒரு தாலந்தோ, இரண்டு தாலந்தோ,
ஐந்து தாலந்தோ உபயோகித்தோர்;
சிறிதானதோ, பெரிதானதோ,
பெற்ற பணி செய்து முடித்தோர். – அழகாய்

ஜீவ புத்தகத்தில் நம் பெயர் உண்டா? யோவானுக்கு வெளிப்படுத்தப்பட்ட விசேஷத்தில் எழுதியுள்ளபடி இந்த ஜீவ புத்தகம் திறக்கப்படும். அதில் இடம் பெற்ற பெயர்கள் வாசிக்கப்பட்டு, அப்பரிசுத்தவான்கள் பரலோகில் பிரவேசிக்கும் பாக்கியம் பெறுவார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை உத்தமத்துடன் பின்பற்றி, உன்னதத்தின் படிக்கட்டுகளில் ஏறுவதற்கு உலகைக் கடந்த பரிசுத்தவான்கள், மேகம் போன்ற திரளான சாட்சிகளாக இவ்வரிசையில் இடம் பெற்றுவிட்டார்கள்.

விஷ்வவாணியின் ஸ்தாபகரான சகோதரர் எமில் ஜெபசிங், இக்கருத்தைத் தன் மனதில் கொண்டு, இப்படிப்பட்ட பரிசுத்தவான்களைத் தன் நினைவில் நிரந்தரமாக வைத்திருப்பது வழக்கம். ஒரு குறிப்பிட்ட நாளிலே, இப்படிப்பட்ட நினைவுடன், தனக்கு அருமையான, சாத்தான்குளத்தைச் சேர்ந்த பரிசுத்தவான் திரு. காபிரியேல் ஸ்டீபனையும், தனது பெற்றோர் மறைதிரு Y.C. தவமணி ஐயரையும், கிரேஸ் அம்மையாரயும் எண்ணி, ஜெபித்துக் கொண்டிருந்தார். அப்போது இந்த உலகில் பயணம் தொடரும் தானும் தனக்கும் நேரம் வரும்பொழுது, அந்த அழகான வரிசையில் பரிசுத்தவான்களுடன் நிற்க வேண்டும் என ஜெபிக்கலானார். அவ்வாறு ஜெபித்த நிலையில், அவர் உள்ளத்தில இப்பாடல் உருவானது.

ஆண்டவர் தரும் நிலையான சமாதானத்தை, மனஅமைதியின்றித் தவிக்கும் இவ்வுலக மக்களுக்கு நற்செய்தியாக எடுத்துச் செல்லும் ஊழியர்களின் பாதங்கள், மலைகளின்மேல் எவ்வளவு அழகாய் இருக்கின்றன என்ற ஏசாயா தீர்க்கத்தரிசியின் விமரிசனத்தை உள்ளத்தில் நிறுத்தி, இவ்வுலக வாழ்வில் ஆண்டவருக்காக, அவர் தந்த தாலந்துகளைக் கொண்டு ஊழியம் செய்தால்,

நித்திய வாழ்வில் பன்மடங்கு ஆசீர்வாதங்களை நாம் பெறுவது நிச்சயமென்ற கருத்தை இப்பாடலில் நாம் காணலாம.

மூன்றே சரணங்களுடன் சகோதரன் இயற்றிய இப்பாடல் பிரபலமானது எனவே, பின் நாட்களில்,

"காடு மேடு கடந்து சென்று
கர்த்தர் அன்பைப் பகிர்ந்தவர்கள்;
உயர்வினிலும் தாழ்வினிலும்
ஊக்கமாக ஜெபித்தவர்கள்,"

போன்ற பல சரணங்களைப் பலர் இப்பாடலுடன் இணைத்துப் பாடுகின்றனர்.

சகோதரர் எமில் ஜெபசிங், நாம் இவ்வுலகில் ஆண்டவரைத் துதித்துப் போற்ற வேண்டும், அவருக்காக நற்சாட்சியுடன் வாழ வேண்டும், அவரது ஊழியத்தில் உற்சாகமாக ஈடுபடவேண்டுமென, நம்மை ஊக்குவிக்கும் பல பாடல்களை எழுதியிருக்கிறார். அத்துடன் நித்திய பரம ராஜ்ஜியத்தைப் பற்றி இப்படிப்பட்ட பல பாடல்களையும் இயற்றியிருக்கிறார்.

இச்சகோதரர், "இந்த உலகத்தில நாம் எத்தனை ஓட்டங்கள் ஓடினாலும், சாதனைகள் புரிந்தாலும், கண்மூடும் வேளையில், அழகாய் நிற்கும் பரிசுத்தரின் வரிசையில் நமக்கும் ஒரு இடம் உண்டு என்ற நிச்சயமே பெரியது," என்று கூறுகிறார். எனவே, நித்திய வாழ்வின் நிச்சயத்துடன், நமது இவ்வுலக வாழ்வின் ஓட்டத்தை ஆண்டவரின் துணையுடன், அவரை நோக்கியே பொறுமையோடு ஓடுவோமா?

**(நன்றி: அமைதி நேர ஊழிய வெளியீடு)**

## திருமறைப்பாடம் வாசிப்பவர்கள் - செப்டம்பர் 2019

| | | |
|---|---|---|
| 06-09-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Virgin Jegatha Jino |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Immanuel Prince |
| 13-09-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Aspin Bejo |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Issac Solomon |
| 20-09-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Ashika Joel |
| | இரண்டாம் வேதபாடம் | Mr. Jean C.R. Shibin |
| 27-09-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Baby Raja Kumari prince |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jenkin Raj |
| 04-10-2019 | முதலாம் திருமறைப்பகுதி | Mrs. Boopathy Baskar |
| | இரண்டாம் திருமறைப்பகுதி | Mr. Jino John |

# ஆண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – ஆகஸ்ட் 2019




ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவருடைய மகா கிருபையால் நமது சபையின் ஆண்கள் சங்க கூட்டம் 15-08-19 அன்று 9:30 மணியளவில் Annex ஹாலில் வைத்து நடைபெற்றது. அதில் சங்கசெயலர் திரு. சைலஸ் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது. பின்பு ஆவிக்குரிய பாடல்களை பாடி நன்றி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

அதன்பின்னர் சங்கீதம் 115 வாசிக்கப்பட்டு சகோதரர் அலெக்ஸ் பாஸ்கர் அவர்கள் ஆண்டவருடைய வார்த்தைகளை பகிர்ந்துகொண்டார்கள்.

செய்திக்கு ஆதாரமாக சங்கீதம் 115:13-ம் வசனத்தை மையப்படுத்தி **'கர்த்தருடைய ஆசீர்வாதம்'** என்ற தலைப்பில் செய்தியை வழங்கினார்கள்.

1. கர்த்தருக்குப் பயப்படுதல்
2. நம்பிக்கையாய் இருத்தல்
3. உறுதியாய் ஜெபித்தல்

இந்த மூன்று காரியங்களைக் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார்கள். ஆண்டவரிடத்தில் நம்பிக்கையாய் இருந்து உண்மையாய் ஜெபிக்கும்போது தலைமுறை தலைமுறையாய் ஆசீர்வதிப்பார். ஆண்டவர் வாக்கு மாறாத ஆண்டவர் என்று அருமையாய் விளக்கினார்கள். செய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாய் இருந்தது.

சபை போதகர் Rev. Dr. ஜெசின் அவர்கள் சாட்சிவேளைக்கு பிறகு சபைக்காகவும், குடும்பங்களுக்காகவும், திருச்சபையின் ஊழியங்களுக்காகவும் ஜெபித்து கூட்டம் 11 மணியளவில் இனிதே நிறைவடைந்தது. அனைவருக்கும் ஆசீர்வாதமாய் அமைந்தது.

**கூடுகையை தாங்கியவர்கள் : திரு. விக்டர் தயாசிங் & பெயர் சொல்ல விரும்பாத சகோதரர்**
**உணவு வழங்கியவர் : பெயர் சொல்ல விரும்பாத சகோதரர்**

அருமையான ஆண்டவருடைய பிள்ளைகளுக்கு ஆண்கள் சங்கத்தின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

திருச்சபையின் ஆண்கள் அனைவரும் ஆண்கள் ஐக்கிய சங்கக் கூட்டத்தில் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றுச்செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

**திரு. சைலஸ்**
**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**

# பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை – ஆகஸ்ட் 2019




இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

ஆகஸ்ட் மாத பெண்கள் சங்க கூடுகை ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி, Marthoma hall கீழ்த்தளத்தில் வைத்து இரவு 9:15 மணிக்கு திருமதி. பூபதி பாஸ்கர் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது. ஆவிக்குரிய பாடல்கள் பாடி தேவனைத் துதித்த பின்னர் திருமதி. ஷைனி ஜோகன் அவர்கள் ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுத்தார்கள்.

அதன்பின் நமது போதகர் அவர்கள் நடக்கவிருக்கிற பெண்கள் சங்க விற்பனை விழா பற்றியும், மேலும் சில அறிவிப்புகளையும் வழங்கினார்கள். தொடர்ந்து திருமறைப்பாடமாக சங்கீதம் 45-ம் அதிகாரம் வாசிக்கப்பட்டு, திருமதி. சாரா ராஜாசிங், "ராஜஸ்திரீயின் ஆசீர்வாதங்கள்" என்ற தலைப்பில் தேவசெய்தியை கீழ்க்கண்ட தலைப்புகளில் பகிர்ந்துகொண்டார்கள்.

1. ராஜ சமூகம் - புகழ்ச்சி, மகிழ்ச்சி
2. ராஜாவின் வார்த்தைகள் - அதிகாரமுடையது, ஆலோசனை அளிப்பது

தேவசெய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. பின்னர் சாட்சி வேளையில் ஒரு சகோதரி கர்த்தர் தன் வாழ்வில் செய்த நன்மைகளை சாட்சியாக அறிவித்தார்கள்.

அதன்பின் திருமதி. பிரியதர்ஷினி கனகவேல் அவர்கள் ஜெபக்குறிப்புகளைப் பகிர்ந்துகொள்ள, அந்த ஜெபக்குறிப்புகளுக்காக ஊக்கமான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. பின்பு அவர்களால் நிறைவுஜெபமும் ஏறெடுக்கப்பட்டு பெண்கள் சங்கமானது 11 மணியளவில் இனிதே நிறைவுபெற்றது.

இறுதியில் Sponsor செய்த Mrs. Virgin Jegatha Jino மற்றும் Mrs. Boopathy Baskar அவர்கள் சார்பில் சிற்றுண்டி வழங்கப்பட்டது. அவர்கள் குடும்பங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேவன்தாமே அவர்களை ஆசீரவதித்து வழிநடத்துவாராக.

இனிவரும் நாட்களில் சபையின் பெண்களாகிய நாம் அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு தேவஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**பின்குறிப்பு :-**

நமது பெண்கள் ஐக்கிய சங்கத்தின் தேர்வு வருகிற அக்டோபர் மாத பெண்கள் சங்கத்தில் நடக்கவிருக்கிறது. நமது சபையின் பெண்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேர்வு நாள் : 17, அக்டோபர், 2019
தேர்வு பகுதி : மாற்கு சுவிசேஷம் முழுவதும்
மனன பகுதி : சங்கீதம் 112,113, மற்றும் 114 அதிகாரங்கள்

**திருமதி. சாரா ராஜாசிங்**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்**

## பெண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி - 78

### செப்டம்பர் 2019 மாத கேள்விகள்
### (சங்கீதம் 43 - 52 வரை)

1. பரிசுத்த பர்வதத்திற்கும், கர்த்தருடைய வாசஸ்தலத்திற்கும் என்னைக்கொண்டு போவது எது?
2. வில்லும், பட்டயமும் நமக்கு தர இயலாதது எது?
3. எங்கள் ஆத்துமா எது மட்டும் தாழ்ந்திருக்கிறது?
4. கர்த்தரின் ராஜ்ஜியத்தின் செங்கோல் எப்படிப்பட்டது?
5. ராஜஸ்திரீ அணியும் தங்கம் எப்படிப்பட்டது?
6. கர்த்தர் தமது சத்தத்தை முழங்கப்பண்ணினபோது நடந்தது எது?
7. கர்த்தரே தேவன் என்று அறிந்துகொள்ள நாம் செய்யவேண்டியது?
8. யாருடைய சிறப்பான தேசம் நமக்கு தெரிந்தளிக்கப்படும்?
9. பூமியனைத்திற்கும் ராஜா யார்?
10. அரண்மனைகளில் தேவன் எப்படிப்பட்டவராக அறியப்பட்டிருக்கிறார்?
11. ஆலயத்தின் நடுவில் சிந்திக்கவேண்டியது எது?
12. பாதாளத்தின் வல்லமைக்கு தேவனால் தப்புவிக்கப்படுவது எது?
13. கனம் பொருந்தியவனாயிருந்தும், அறிவில்லாத மனுஷன் எதற்கு ஒப்பாயிருக்கிறான்?
14. ஆபத்துக்காலத்தில் கூப்பிட்டு விடுதலைப்பெற்ற நாம் செய்யவேண்டியது எது?
15. தன் வழியை செவ்வைப்படுத்துகிறவனுக்கு வெளிப்படுத்துவது எது?
16. உள்ளத்தில் எவை இருக்க விரும்புகிறீர்?
17. என் வாய் உமது புகழை அறிவிக்க கர்த்தர் என்ன செய்யவேண்டும்?

18. தேவனுக்கேற்கும் பலிகள் எவை?
19. பொல்லாப்பில் பெருமை பாராட்டுகிறவன் யார்?
20. தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவ மரத்தைப் போலிருப்பவன் யார்?

## ஆகஸ்ட் 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. பூமி – சங்கீதம் 33:5
2. குதிரை – சங்கீதம் 33:17
3. பொல்லாப்புக்கு – சங்கீதம் 34:13
4. எலும்புகளை – சங்கீதம் 34:20
5. சிங்கக்குட்டிகளுக்கு – சங்கீதம் 35:17
6. சம்பூரணத்தினால் - சங்கீதம் 36:8
7. கால் - சங்கீதம் 36:11
8. பூமியை – சங்கீதம் 37:11
9. முறியும் - சங்கீதம் 37:17
10. நடைகள் - சங்கீதம் 37:23
11. நீதிமான்களுடைய – சங்கீதம் 37:31
12. குடல்கள் - சங்கீதம் 38:7
13. 4 – சங்கீதம் 39:5
14. பயங்கரமான குழியிலும், உளையான சேற்றிலுமிருந்தும் - சங்கீதம் 40:2
15. நினைவாயிருக்கிறார் - சங்கீதம் 40:17
16. சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவனை – சங்கீதம் 41:1
17. குதிகாலைத் தூக்கி – சங்கீதம் 41:9
18. கர்த்தர் பிரியமாய் இருப்பதால் - சங்கீதம் 41:11
19. மான் - சங்கீதம் 43:1
20. ஆழத்தை ஆழம் - சங்கீதம் 43:7

### ஆகஸ்ட் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| Mrs. Aspin Bejo | Mrs. Leela Gladson | Mrs. Sapthekha Jerry Sathya |
| Mrs. Boopathi Baskar | Mrs. Manju Martin | Mrs. Sarah Rajasingh |
| Mrs. Felsi Rani John | Mrs. Nisha Rajan | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Golden Irene Sheeja Robin | Mrs. Percy Jean | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Jancy Deepa Victor | Mrs. Priyadarsini Kanagavel | Mrs. Shiney Johan |
| Mrs. Jeya Rani Victor | Mrs. Pushpa Rani Moorthy | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Juslin Jaslin | Mrs. Regin Justa Vinolin | Mrs. Virgin Jegatha Jino |

# ஆண்கள் பகுதி – திருமறை அறிவுப்போட்டி - 63

## செப்டம்பர் 2019 மாத கேள்விகள்
## (2 நாளாகமம் 1 முதல் 10 வரை)

1. 'நீ விரும்புகிறதைக் கேள்' என்று தேவன் யாரிடம் கூறினார்?
2. எகிப்திலிருந்து குதிரை எத்தனை காசுக்கு வாங்கப்பட்டது?
3. ஆலயம் கட்டுகிற வேலையாளுக்கு கூலியாக எத்தனை மரக்கால் வாற்கோதுமை கொடுக்கப்படும் என்று கூறினார்?
4. ஆலயம் கட்ட அனுப்பப்பட்ட புத்திமானாகிய நிபுணன் யார்?
5. ஆலயம் கட்டத் துவங்கின தேதி எது?
6. எத்தனை மாதளம் பழங்கள் சங்கிலியில் கோர்க்கப்பட்டன?
7. 10 கொப்பரைகள் எதற்காக உருவாக்கப்பட்டது?
8. எத்தனை கடல்தொட்டி இருந்தது?
9. உடன்படிக்கைப் பெட்டியில் எத்தனை கற்பலகைகள் இருந்தன?
10. ஏகசத்தமாய் கர்த்தரைத் துதித்து பாடுகையில் தேவாலயம் எதினால் நிறைந்தது?
11. கர்த்தர் தாவீதுக்கு வாக்கினால் சொன்னதை எதினால் நிறைவேற்றினார்?
12. எப்படிப்பட்ட மனுஷன் இல்லை என்று குறிப்பிடுகிறார்?
13. எந்த நாள் விசேஷித்த ஆசரிப்புநாளாய் தேவாலயத்தில் கொண்டாடப்பட்டது?
14. வேறு தேவர்களை பின்பற்றினால் எது பிடுங்கப்படும்?
15. இஸ்ரவேல் புத்திரரை தன் வேலைசெய்ய அடிமைப்படுத்தாதவர் யார்?
16. ஏதோம் தேசத்து கடல் ஓரத்திலிருக்கும் பகுதிகள் எவை?
17. 'உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள்' என்று கூறியது யார்?
18. சிங்காசனத்தின் கை சாய்மானத்தின் அருகே நின்ற மிருகத்தின் உருவம் எது?
19. ராஜாவாக்கும்படி சீகேமுக்கு போன மனிதன் யார்?
20. அதோராம் எப்படிக் கொல்லப்பட்டான்?

## ஆகஸ்ட் 2019 மாத திருமறை அறிவு போட்டிக்கான விடைகள்

1. 4000 பேர் - 1நாளா. 23:5
2. 4 பேர் யாகாத், சீனா, எயூஷ், பெரீயா – 1நாளா. 23:10
3. 20 வயதுக்கு மேல் - 1நாளா. 23:24
4. 8 பேர் - 1நாளா. 24:4

5. பெத்தகியா – 1நாளா. 24:16
6. அஷாபியா, அவன் குமாரர், சகோதரர் 12 பேர் - 1நாளா. 25:19
7. தேவனுடைய ஆலயத்து பொக்கிஷங்களை விசாரிப்பது – 1நாளா. 26:20
8. தகப்பன் - 1நாளா. 26:10
9. 40 – 1நாளா. 26:31
10. 24000 – 1நாளா. 27:1
11. யோவாப் - 1நாளா. 27:7
12. தாவீதின் சகோதரன் - 1நாளா. 27:18
13. 20 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களை – 1நாளா. 27:23
14. ஒலிவ மரம் - 1நாளா. 27:28
15. யோனத்தான் - தாவீதின் சிறிய தகப்பன் - 1நாளா. 27:32
16. சாலமோனை – 1நாளா. 28:6
17. நினைவுகளின் தோற்றங்களையெல்லாம் - 1நாளா. 28:9
18. கரத்தினால் எழுதி – 1நாளா. 28:19
19. மனப்பூர்வமானவர்கள் - 1நாளா. 29:5
20. உத்தம குணத்தில் - 1நாளா. 29:17

**ஆகஸ்ட் மாத திருமறை போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | | |
|---|---|---|
| Mr. Alex Baskar | Mr. Jean C. R. Shibin | Mr. Rajan V. N. |
| Mr. Anu | Mr. Jino John | Mr. Ramesh |
| Mr. Bejo Nelson | Mr. Johan Pratheep | Mr. Robin Devadhas |
| Mr. David Prabhakaran | Mr. Kanagavel | Mr. Sylus |
| Mr. Jaslin Sundara Kumar | Mr. Prince J. P. | |

## அன்புடன் அழைக்கிறோம்!

**நமது சபையின் ஸ்தோத்திர பண்டிகை இம்மாதம் 13 மற்றும் 20 தியதிகளில் சிறப்பாக நடைபெற உள்ளது. அனைவரும் கலந்து கொள்ளவும், ஜெபிக்கவும் அன்புடன் அழைக்கிறோம்.**

13-09-2019 – சிறப்பு இசைவழி நற்செய்தி
20-09-2019 – பரிசுத்த நற்கருணை ஆராதனை மற்றும் ஏல விழா

# வாழ்வு வழங்கும் கிறிஸ்து

## 1. இறைவனுக்கு அடங்கி நடத்தல்:-

**“ஒருவருக்கொருவர் துணைநிற்கிற அகங்காரிகள் அவருக்கு அடங்க வேண்டும்” – யோபு 9:13**

கால்பந்து விளையாட்டில் புத்திசாலித்தனமாக விளையாடி தன் அபார ஆட்டத்திறமையினால் 1998-ல் பிரான்ஸ் நாட்டு கால்பந்து அணி உலக கோப்பையை வெல்வதற்குக் காரணமாயிருந்தவர் ஸீனடின் ஸீடேன். இவர் தன் தலைமையில் 2006-ம் ஆண்டில் பிரான்ஸ் அணியை இறுதிபோட்டி வரை அழைத்துச் சென்றார். ஆனால் இறுதிப்போட்டியில் இறுதி நிமிடங்களில் 1-1 என்ற பரபரப்பான சூழலில் எதிரணி வீரர் மெட்ராஸியை தன் தலையால் முட்டினார். விதிமுறைக்கு அடங்காததால் ஆட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். வெற்றிக்காகப் போராடி கடைசி நேரத்தில் ஏமாற்றம் கண்டார். விதிமுறைக்கு அடங்காததால் உலகக் கோப்பை கனவை இழந்தது பிரான்ஸ்.

விளையாட்டுகளில் விதிமுறைகளை வகுத்து அதற்கு அடங்கி நடக்கவேண்டும் என்றிருப்பதுபோல் கடவுளும் மனிதன் இவ்வுலகில் எப்படி வாழவேண்டும் என்ற இன்றியமையாத விதிமுறைகளை மனிதனுக்குத் தந்திருக்கிறார். சிறியவர்கள் வயது முதிர்ந்தவர்களுக்கும், பணியில் இருப்போர் அதிகாரிகளுக்கும் அடங்கி நடப்பது போன்று தன்னைப் படைத்த ஆண்டவருக்கு அடங்கி நடக்கும்போது வாழ்வில் நிறைவான ஆசிகளைத் தருகிறார். வாழ்வும் வெற்றியானதாக அமைகிறது. யோபு பக்தன் குறிப்பிடும்போது கடவுள் ஞானமுள்ளவர்; அவரது ஞானம் மனித ஞானத்திலும் உயர்ந்தது. கடவுள் பராக்கிரமமுள்ளவர். புயலினால் நொறுக்குகின்றார். வாழ்க்கையை கசப்பினால் நிரப்புகின்றார். இத்தகைய சூழலிலும் கடவுளுக்கு அடங்கி நடக்கவேண்டும். நான் நீதிமானாயிருந்தாலும் கடவுளிடம் வழக்கிடாமல் இரக்கங்களுக்காக கெஞ்சுவேன் என்று யோபு குறிப்பிடுகின்றார்.

ஆகவே ஆண்டவரின் திருமுன் மனிதன் தனது தகுதியின்மையை உணரும்போது ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் செய்வார். இறைவனுக்கு அடங்கி நடப்போர் இறைவனோடு வாழ்வர்.

## 2. கடவுள் ஏற்கும் வாழ்வு:-

**“இதோ தேவன் உத்தமனை வெறுக்கிறதில்லை” (யோபு 8:20).**

மாணவன் ஒருவன் பள்ளிக்கு வரும் வழியில் அடிபட்டுக்கிடந்த ஒருவரை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு விரைவாக வகுப்பறைக்கு வந்தான்.

உடன் மாணவன் அவன் ஆடையில் படிந்திருந்த இரத்தக் கறையினை சுட்டிக் காட்டினான். அப்போதுதான் மாணவன் தான் இரத்தக்கறை படிந்திருந்த சட்டையினை அணிந்துள்ளதை அறிந்து விரைவாக இல்லம் சென்று மாற்றுச்சட்டை அணிந்து ஓடோடி வந்தான். ஆனால் வகுப்புக்குத் தாமதமானது. ஆசிரியர் காலதாமதமாய் வருபவர்களை வகுப்புக்கு வெளியில் நிறுத்துவது வழக்கம். இந்த மாணவன் தனது நிலையை விளக்கிக்கூற, உடன் மாணவர்களும் நடந்தவைகளைச் சொல்ல, மாணவனின் உதவும் தன்மையைப் பாராட்டி வகுப்பறையில் அனுமதித்தார் ஆசிரியர். கடவுளும் நற்செயல்புரியும் உத்தமர்களை வெறுப்பவர் அல்ல.

“நற்செயல் ஒருபோதும் அழிவதில்லை என்பது போற்றுதற்குரிய செயல்” கறையில்லா வாழ்வு வாழ்ந்து நற்செயல்புரிவோர் வாழ்வில் ஆசீர்வாதங்கள் காலதாமதமானாலும் அவர்கள் கைவிடப்படுவதில்லை என்பதற்கு யோபுவின் வாழ்வு முன்உதாரணம். மாசற்றவர்களின் தொடக்கம் எளிமையாக இருப்பினும், வருங்காலம் இனிமைமிக்கதாக அமைந்திடும். யோபுவைக் கடவுள் மாசற்றவராய் கண்டார். யோபுவின் நண்பர் பில்தாதும், யோபுவை பார்த்து மாசற்றவராய் பகிரும் மனநிலையோடு வாழ்ந்தால் கடவுள் திரும்பவும் ஆசிகள் தருவார் என்கிறார்.

கறையுடையோர் வாழ்வோ சிலந்தி பூச்சி பிடித்த வீடு போலிருக்கும். அதன்மேல் ஒருவர் சாய்ந்தால் நிலைத்திராது. கறையுடையோர் வாழ்வு கற்குவியல் மீதும், கற்பாறை மீதும் இடம்தேடும் வேர்களைப் போன்று விரைவாக அழிந்துவிடும். இதைப்போன்றே கறையுடையோர் மகிழ்ச்சியும் நிலைத்திராது. ஆகவே கறையில்லாதவரைக் கடவுள் கைவிடார். கடவுள், மனித வாழ்வின் கறைகள் மாறும்போது மனிதனைக் கைவிடாது தன்னோடு இணைத்துக்கொள்ளுகின்றார். குறையற்ற வாழ்வு கடவுள் ஏற்கும் வாழ்வு.

### 3. நல்வாழ்வுக்கு வழி:-

**“கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதக சிட்சையே ஜீவவழி” (நீதி. 6:23).**

உலககோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டி நடந்தபோது, மாணவர்களுக்கு அரசு பொதுத்தேர்வும் நடைபெற்றது. வகுப்பாசிரியர் மாணவர்களிடம் நீங்கள் தேர்வுக்கு படிப்பீர்களா? அல்லது கிரிக்கெட் பார்ப்பீர்களா? என்று கேட்டார். அதற்கு மாணவர்கள் கிரிக்கெட் போட்டியைத்தான் பார்ப்போம். காரணம் அது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் வருகிறது. ஆனால் தேர்வு அப்படியல்ல மார்ச்சில் தவறினால் அக்டோபரில் எழுதிக் கொள்ளலாம் என்றனர். ஆசிரியர், உங்கள் வாழ்வு நாசமாகிவிடும், தேர்வில் கவனம் செலுத்துங்கள், வாழ்வு பெறுங்கள் என்றார். மாணவர்கள் ஆசிரியரின் கண்டிப்பைக் கேட்டனர். வெற்றியான நல்வாழ்வு அடைந்தனர்.

நல்வாழ்வை விரும்பாதோர் எவருமேயில்லை. நல்வாழ்வை தினமும் வாழ்வில் பெற்றிட மனிதன் உடற்பயிற்சியை மேற்கொள்ளுகிறான். மருத்துவரைச் சந்திக்கிறான். மருத்துவ ஆலோசனைப் பெறுகிறான். அதன்படி நோயற்ற வாழ்வு பெறுகிறான். இவ்வாறு உடலின் நல்வாழ்வு மீது அக்கறைக்கொண்டு செயல்படும் மனிதன், தனது வாழ்வின் செயல்பாடுகள்மூலம் ஆன்மீக நல்வாழ்வு பெற்றிட தவறுகிறான். இவர்களைக் கண்டித்து நல்வழிப்படுத்தவேண்டும் என்பது திருமறை சொல்லும் அருள்வாக்கு.

இஸ்ரவேலர் கானானில் இறைகட்டளைகளைக் கடைப்பிடிப்பதன் வழி நல்வாழ்வு பெறுவீர்கள் என கடவுள் சொன்னார். ஆனால் அவர்களோ கட்டளைகளை மீறியதால் தண்டனைமூலம் கண்டிக்கப்பட்டனர். நல்வாழ்வும் பெற்றனர். தீயவாழ்வு வாழ்ந்துகொண்டிருந்த நினிவே நகர் மக்கள் கண்டிப்புமூலம் நல்வாழ்வு பெற்றனர்.

நல்வாழ்வு பெற்றிட நமக்கு பல வாய்ப்புகள் தரப்பட்டுள்ளன. அவற்றை பயன்படுத்தி நல்வாழ்வு பெற முயல்வது நமது கடமை. இதைத்தான் சாலமோன் ஞானி “பிரம்பை கையாடதவன் தன் மகனை பகைக்கிறான்” என்கின்றார். கண்டித்தலை கடைபிடிப்போர் கறையில்லா வாழ்வு பெறுவர்.

**- V.G. மஹிழா ஜெங்கின் ராஜ்**

## ஜெபிக்க சில குறிப்புகள்

**திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- நம் போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாக குழு தெய்வ பயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிட ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சி காண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.

- திருச்சபைப் பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், பேராயங்களுக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், பேராயர், போதகர் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- நமது பேராயத்தின் பேராயர் Rt. Rev. Dr. செல்லையா அவர்கள் இறைபணி மூலம், இறை சித்தம் நிறைவேற்றும் பேராயராய் செயல்பட்டு, பேராயம் நல்ல முறையில் இயங்கவும், இறையருள் வேண்டி மன்றாடுவோம்.
- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள் தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மக்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**தேசத்திற்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-**

- தேசத்தலைவர்களுக்காகவும், அரசு அதிகாரிகளுக்காகவும், அதிகாரத்திலுள்ள அனைவரும் நேர்மையும் பயனுள்ள வகையிலும் ஆளுகைசெய்ய ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- இன்றைய நம் நாட்டின் எல்லாத் துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் அரசு சலுகைகளை, உரிமைகளைக்கூட சரிவர பெறமுடியாதச் சூழலில், ஊழல் என்னும் தீமை அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- மது என்னும் தீமை இன்றைய சமுதாயத்தையும், குடும்பத்தையும், தனிமனித வாழ்வையும் பெரிதும் பாதித்துவரும் சூழலில் தமிழகத்தில்

பூரண மதுவிலக்கு கொண்டுவரப்பட ஆண்டவரை நோக்கி மன்றாடுவோம்.

- வாழ்வில் குறுக்கிடும் துன்பம், தோல்வி, நோய், கடன்பாரம் போன்றவைகளுக்கு தீர்வு தற்கொலையே என்கிற முடிவில் பலர் தங்களுக்கு ஆண்டவர் ஈவாக தந்த உயிரை தாங்களே அழித்து வருகின்றனர். குறிப்பாக இளம் தலைமுறையினரே அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துவரும் சூழலில், தற்கொலை என்னும் தீமை முழுமையாக அகல ஆண்டவரிடம் மன்றாடுவோம்.
- வேலையின்றி வாடுவோருக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுக்க அரசு புதிய தொழில் நிறுவனங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆண்டவரிடம் மன்றாடுவோம்.

## குடும்பங்களுக்காக ஜெபிக்க:-

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலை இழப்பு, விசா பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.
- கருவுற்றிருக்கிற சகோதரிகள் ஆரோக்கியமாயிருக்கவும், ஏற்ற நாளில் நல்ல விடுதலைப் பெறவும் ஜெபிப்போம்.



## May God Bless All

### Birthday Celebrants – September 2019

| | |
|---|---|
| 01st September | Miss. Cheryl Hannah, D/o Mr. Immanuel Prince |
| 01st September | Mr. Benny Moses |
| 02nd September | Mr. J. Vinolin Vetha Kumar |
| 03rd September | Mrs. Jeevlin Esther, W/o Mr. Benny Moses |
| 07th September | Miss. Joanna, D/o Mr. Berin Raja |
| 07th September | Mr. Robinson |
| 08th September | Master. Julian Aldric, S/o Mr. Joel |
| 08th September | Miss. G. Linta Salvin, D/o Mr. George |
| 09th September | Mrs. Annlin Kirubha, W/o Mr. Herbert Goldston |
| 09th September | Mr. Rex Macedo |
| 11th September | Miss. R. Marshya, D/o Mr. Ramji |
| 13th September | Mrs. Enolia, W/o Mr. Michael |
| 14th September | Miss. Britny Pearlzlint, D/o Mr. Jenkin Raj |
| 15th September | Miss. Merzlin Awana, D/o Mr. Melbin |
| 16th September | Master. Levin R. Macedo, S/o Mr. Rex Macedo |
| 19th September | Master. Manasseh Gabriel, S/o Mr. Srinivas |
| 19th September | Mrs. P. N. Sobia, W/o Mr. Jaspher Stalin |
| 20th September | Mrs. Nisha, W/o Mr. V. N. Rajan |
| 21st September | Mr. Arumainayagam Rajasingh |
| 23rd September | Mr. T. Santhosh |
| 24th September | Mrs. Sterbie, W/o Mr. Ramji |
| 25th September | Master. Jason Samuel, S/o Mr. Vimal Kumar |
| 27th September | Mrs. Priyadharshini, W/o Mr. Kanagavel |
| 27th September | Miss. Johanna Shirly, D/o Mr. Vimal Kumar |
| 27th September | Master. B. Nidhin Broose, S/o Mr. Broosewelt |
| 29th September | Master. Samuel Adriel Sanjay, S/o Mr. Michael |

# Wedding Day Anniversaries – September 2019

| | |
|---|---|
| 04th September | Mr. Venil Singh & Mrs. Sobiya |
| 07th September | Mr. Sujith & Mrs. Sheeba |
| 08th September | Mr. Suresh P. & Mrs. Sajitha |
| 10th September | Mr. Jino John & Mrs. Virgin Jegatha |
| 10th September | Mr. Paul Pratheeban & Mrs. Jesi Kala |
| 11th September | Mr. John Jacob & Mrs. Felsy |
| 12th September | Mr. Arun Paul & Mrs. Saja |
| 14th September | Mr. J. P. Prince & Mrs. Vanitha Rani |
| 15th September | Mr. R. Nelson & Mrs. Mabel |
| 20th September | Mr. Augustine & Mrs. Sangeetha |
| 28th September | Mr. Justus Martin & Mrs. Manju |

## அனுதின மன்னா – செப்டம்பர் 2019

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி தரப்பட்டுள்ளது. வாசித்து, தியானித்து குடும்ப ஜெபத்தில் பயன்படுத்துங்கள். ஓராண்டில் திருமறைப்பகுதியை தனி ஜெபத்தில் தியானித்து பயனடையுங்கள்.

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| செப்டம்பர் 1 | ஞாயிறு | ஆதி. 9:8-17 | ஆதி. 9:15,16 | தானியேல் 1-2 |
| செப்டம்பர் 2 | திங்கள் | 2தீமோ. 1:3-7 | 2தீமோ. 1:1 | தானியேல் 3-4 |
| செப்டம்பர் 3 | செவ்வாய் | அப். 10:1-8 | அப். 10:4 | தானியேல் 5-6 |
| செப்டம்பர் 4 | புதன் | ஆதி. 30:22-24 | ஆதி. 30:22 | தானியேல் 7-9 |
| செப்டம்பர் 5 | வியாழன் | எண். 10:1-10 | எண். 10:9 | தானியேல் 10-12 |
| செப்டம்பர் 6 | வெள்ளி | நியா. 16:21-31 | நியா. 16:28 | ஓசியா 1-4 |
| செப்டம்பர் 7 | சனி | 2இரா. 20:1-11 | 2இரா. 20:3 | ஓசியா 5-9 |
| செப்டம்பர் 8 | ஞாயிறு | நெகே. 1:1-11 | நெகே. 1:9 | ஓசியா 10-14 |
| செப்டம்பர் 9 | திங்கள் | யோபு 4:1-9 | யோபு 4:7 | யோவேல் 1-3 |
| செப்டம்பர் 10 | செவ்வாய் | புலம். 3:1-26 | புலம். 3:19 | ஆமோஸ் 1-3 |

| தேதி | நாள் | திருமறைப் பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| செப்டம்பர் 11 | புதன் | லூக். 23:33-44 | லூக். 23:42 | ஆமோஸ் 4-6 |
| செப்டம்பர் 12 | வியாழன் | எபேசி. 3:13-21 | எபேசி. 3:20 | ஆமோஸ் 7-9 |
| **செப்டம்பர் 13** | **வெள்ளி** | **யோபு 2:1-10** | **யோபு 2:3** | **ஒபதியா** |
| செப்டம்பர் 14 | சனி | 1இரா. 19:1-8 | 1இரா. 19:7 | யோனா 1-4 |
| செப்டம்பர் 15 | ஞாயிறு | ஆபகூக் 3:1-15 | ஆபகூக் 3:2 | மீகா 1-4 |
| செப்டம்பர் 16 | திங்கள் | **சங். 37:16-26** | **சங். 37:25** | **மீகா 5-7** |
| செப்டம்பர் 17 | செவ்வாய் | 1சாமு. 2:1-10 | 1சாமு. 2:8 | நாகூம் 1-3 |
| செப்டம்பர் 18 | புதன் | லூக். 19:11-26 | லூக். 19:17 | ஆபகூக் 1-3 |
| செப்டம்பர் 19 | வியாழன் | அப். 10:1-23 | அப். 10:4 | செப்பனியா 1-3 |
| **செப்டம்பர் 20** | **வெள்ளி** | **1இரா. 21:16-29** | **1இரா. 21:29** | **ஆகாய் 1-2** |
| செப்டம்பர் 21 | சனி | மத். 6:14-20 | மத். 6:14 | சகரியா 1-6 |
| செப்டம்பர் 22 | ஞாயிறு | சங். 40:1-17 | சங். 40:17 | சகரியா 7-10 |
| செப்டம்பர் 23 | திங்கள் | சகரி. 8:1-17 | சகரி. 8:15 | சகரியா 11-14 |
| செப்டம்பர் 24 | செவ்வாய் | எரே. 2:1-9 | எரே. 2:2 | மல்கியா 1-4 |
| செப்டம்பர் 25 | புதன் | எரே. 15:15-21 | எரே. 15:15 | மத்தேயு 1-4 |
| செப்டம்பர் 26 | வியாழன் | எரே. 29:10-14 | எரே. 29:11 | மத்தேயு 5-7 |
| **செப்டம்பர் 27** | **வெள்ளி** | **எரே. 31:16-28** | **எரே. 31:20** | **மத்தேயு 8-9** |
| செப்டம்பர் 28 | சனி | 2சாமு. 14:1-17 | 2சாமு. 14:14 | மத்தேயு 10-12 |
| செப்டம்பர் 29 | ஞாயிறு | நெகே. 13:10-14 | நெகே. 13:14 | மத்தேயு 13-14 |
| செப்டம்பர் 30 | திங்கள் | 2இரா. 13:22-25 | 2இரா. 13:23 | மத்தேயு 15-17 |
| அக்டோபர் 1 | செவ்வாய் | லேவி. 25:8-12 | லேவி. 25:19 | மத்தேயு 18-20 |
| அக்டோபர் 2 | புதன் | மத். 19:16-24 | மத். 19:21 | மத்தேயு 21-22 |
| அக்டோபர் 3 | வியாழன் | சங். 36:1-12 | சங். 36:8 | மத்தேயு 23-24 |
| **அக்டோபர் 4** | **வெள்ளி** | **யோவா. 2:1-11** | **யோவா. 2:5** | **மத்தேயு 25-26** |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

01-09-2019 ஞாயிறு - அருணோதய ஆராதனை
இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00

05-09-2019 வியாழன் – இரவு ஜெபக்கூடுகை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00

06-09-2019 வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45

13-09-2019 வெள்ளி – அறுப்பின் பண்டிகை இசைவழி நற்செய்தி
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45

14-09-2019 சனி – உபவாச ஜெபக் கூட்டம்
இடம் : மார்த்தோமா ஹால் / காலை 10:30–1:00

19-09-2019 வியாழன் - பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00

19-09-2019 வியாழன் - ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை
இடம் : மார்த்தோமா ஹால் / நேரம்: இரவு 9:00–11:00

20-09-2019 வெள்ளி - பரிசுத்த நற்கருணை ஆராதனை மற்றும்
அறுப்பின் பண்டிகை விற்பனை விழா
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45

27-09-2019 வெள்ளிஆராதனை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45

01-10-2019 செவ்வாய் - அருணோதய ஆராதனை
இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00–6:00

03-10-2019 வியாழன் – இரவு ஜெபக்கூடுகை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: இரவு 9:00–11:00

04-10-2019 வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை
இடம் : C.S.I. மலையாளம் ஹால்/நேரம்: மாலை 4:45–6:45

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| பிரதி மாதம் முதல் தேதி | அருணோதய ஆராதனை<br>நேரம் : அதிகாலை 5:00 – 6:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : C.S.I. மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்

**Contact: Rev. Dr. N. Jesin**

**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail : csitco@gmail.com**
**www.csitamilchurchoman.org**

**(For Private Circulation Only)**